2024 பிப்ரவரி 21]

சிலையை அமைத்து தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேற்றுதான் அதுகுறித்து கடிதம் தந்திருக்கிறார்கள். அது துறையின் பரிசீலனையில் இருக்கிறது. இதுகுறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

37—

ஜமுனாபாரி வெள்ளாட்டினம்

***96012—திரு. தா. உதயசூரியன்:** *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சின்ன சேலம் ஆட்டுப்பண்ணையில் ஜமுனாபாரி வெள்ளாட்டினம் வளர்க்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சங்கராபுரம் தொகுதி, சின்ன சேலம் ஆட்டுப்பண்ணையில் ஜமுனாபாரி ஆடுகள் வளர்க்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.*

[2024 பிப்ரவரி 21

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1956 ஆம் ஆண்டு மாநிலங்கள் பிரிக்கப்படுகின்றபோது, கர்நாடக மாநிலம், பெல்லாரி மாவட்டம் குரேகுப்பாவிலிருந்த ஆடுகள் அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம் ஓசூரில் ஏற்கெனவே இருந்த காரணத்தால், தென்னாற்காடு மாவட்டத்தை ஒட்டியிருக்கக்கூடிய சின்ன சேலத்திற்கு மாற்றப்பட்டு, 1957 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. அப்போது, அங்கிருந்த ஆடுகள், மாடுகள், கோழிகள் இந்தப் பண்ணையோடுதான் சேர்க்கப்பெற்றன. அப்போதும், ஜமுனாபாரி ஆடும் அங்கே வளர்க்கப்பட்டது. இதற்கு முன்பு மாண்புமிகு திருமதி கீதா ஜீவன் அவர்கள், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சராக இருந்தபோதும், முன்னாள் அமைச்சர் அண்ணன் பொங்கலூர் திரு. நா. பழனிசாமி அவர்கள் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சராக இருந்தபோதும், நானும் நேரில் சென்று ஆய்வு செய்தபோதுகூட, ஜமுனாபாரி ஆடுகள் அங்கே இருந்தன. சென்னை சிவப்பு செம்மறி ஆடுகள், வேலூர் முகுந்தராயபுரத்தில் இருந்தன. அது அங்கே தருவிக்கப்பட்டது. ஆனால், இந்த ஜமுனாபாரி ஆட்டினம் இங்கிருந்து வேறு பண்ணைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த ஜமுனாபாரி ஆட்டினத்தை மீண்டும் சின்ன சேலம் ஆட்டுப்பண்ணையில் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பல்வகை பல்லுயிர்களின் இருப்பிடமாக இருந்து வருகிறது. உள்நாட்டின கால்நடை மற்றும் கோழியினங்கள் தமிழகத்தில் மிகுந்து காணப்படுகின்றன. நாட்டினங்களை அவற்றின் எண்ணிக்கைக்கேற்றவாறு பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். இதனடிப்படையில் அசல் இனப் பண்புகளுடன்கூடிய கன்னியாடு, கொடியாடு மற்றும் சேலம் கருப்பு ஆகிய தமிழ்நாட்டு வெள்ளாட்டினங்களுடன், தலச்சேரி, ஜமுனாபாரி ஆகிய பிற மாநில ஆட்டினங்களும் துறையின்கீழ் செயல்படும் மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் ஜமுனாபாரி வெள்ளாட்டினம் மாவட்ட கால்நடைப்

2024 பிப்ரவரி 21]

பண்ணை, செட்டிநாடு மற்றும் புதுக்கோட்டை ஆகிய பண்ணைகளில் பராமரிக்கப்பட்டு வருகிறது. சின்ன சேலம் ஆட்டுப்பண்ணையில் இரண்டு வெள்ளாட்டினங்களான சேலம் கருப்பு மற்றும் தலச்சேரி ஆகிய இனங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பண்ணையில் மூன்றாவதாக ஜமுனாபாரி வெள்ளாட்டினம் வளர்க்கப்பட்டால் அந்த மூன்று இனங்களும் கலப்பினப் பெருக்கம் நடைபெற்று, அவற்றின் அசல் இனப் பண்புகள் குறைவதற்கு அதிக சாத்தியக்கூறுகள் உள்ளன. மேற்கூறிய கலப்பின ஆடுகள் உற்பத்தி என்பது அரசின் கொள்கையான, "நாட்டினங்களைப் பாதுகாத்தல்" என்பதற்கு முரணாக இருப்பதால், சின்ன சேலம் ஆட்டுப் பண்ணையில் ஜமுனாபாரி ஆட்டினங்கள் வளர்ப்பது உகந்தது அல்ல என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், நீங்களே ஒரு பண்ணை வைத்து விட வேண்டியது தானே! (சிரிப்பு)*

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்பினச் சேர்க்கை உருவாக்குவதற்கு ஜமுனாபாரி ஆடு சரிவராது என்று சொல்லப்படுகிறது. இது உயரமான ஆடு, காதுகள் நீளமானது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, இது கலப்பினத்தில் சேர்க்கப்படும்போது— தலச்சேரி ஆடும், சேலம் கருப்பு வெள்ளாடும், அதனோடு தென்னாப்பிரிக்காவிலிருந்து வந்திருக்கக்கூடிய போயர் ஆடு, ராஜஸ்தானில் உள்ள சிரோஹி ஆஜ்மீர் என்கின்ற ஆடுகளை கலப்பினம் செய்யும்போது, ஆடுகளின் எடை, அதிகமாக வருகின்ற வாய்ப்புண்டு. 15 கிலோ, 20 கிலோ என இருக்கின்ற நம்முடைய நாட்டின ஆடுகள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல, கொடியாடு, கன்னியாடு, செம்போரை, கரும்போரை போன்ற ஆடுகளைவிட, இந்த போயர் வகை ஆடுகளையும், சிரோஹி ஆஜ்மீர் ராஜஸ்தான் ஆடுகளையும், கலப்பினம் செய்கின்றபோது, 6-லிருந்து 7 மாதத்திற்குள், 45 கிலோ, 60 கிலோ என எடை உயர்வதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, சின்ன சேலம் ஆட்டுப் பண்ணையில் ஆஜ்மீர் ஆட்டினையும், போயர் ஆட்டினையும் கொண்டுவந்து கலப்பினம் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

[2024 பிப்ரவரி 21

முற்பகல் 11–00

சேலம் மாவட்டம், சின்ன சேலம் ஆட்டுப் பண்ணை 1,096 ஏக்கரிலும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 770 ஏக்கரிலும் உள்ளன. 1,096 ஏக்கர் பரப்பளவு கொண்ட சின்ன சேலம் ஆட்டுப் பண்ணையில் 1,768 தலச்சேரி மற்றும் சேலம் கருப்பு ஆடுகள் இருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) நான் நிறுத்திவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. தா. உதயசூரியன்: ஆகவே, இவ்வளவு பரப்பளவு கொண்ட இந்தப் பண்ணையில் தலச்சேரி, சேலம் கருப்பாடு, மேச்சேரி, சென்னை சிவப்பு ஆகிய 1,768 ஆடுகள்தான் இருக்கின்றன. ஆகவே, ஆடு வளர்ப்பது, மீன் வளர்ப்பது, கோழி வளர்ப்பது ஆகியவை விவசாயிகளுக்கு முக்கியமாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் சொன்ன போயர் ஆடு, சிரோஹி ஆஜ்மீர் ஆடு என்ற கலப்பின ஆடுகளை, இந்த பண்ணையில் கொண்டு வந்தால், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, கிடா ஆடுகளைக் கொடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். வேலிமசால், சவுண்டல், அகத்தி போன்ற பசுந்தீவனங்களைவிட, தாய்லாந்திலிருந்து வரப்பெறுகின்ற Super Napier புல்லில் நெட்டை, குட்டை இருக்கின்றது. தாய்லாந்திலிருந்து வரப்பெறுகின்ற இந்த பச்சை புல்லானது ஓர் ஏக்கருக்கு 180 டன் உருவாக்கப்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, 1,096 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த பண்ணையில், இந்த பசுந்தீவனங்களை வளர்த்து ஏழையெளிய விவசாயிகளுக்கு புல் கரணைகளை இலவசமாகக் கொடுப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையின்மூலம் 7 பண்ணைகளில் 1,729 செம்மறி ஆடுகளும், 6 பண்ணைகளில் 1,112 வெள்ளாடுகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பண்ணைகள் உயர் மரபணு மற்றும் அதிக

2024 பிப்ரவரி 21]
உற்பத்தித் திறன் கொண்ட கால்நடைகளைப் பராமரித்து, அதனால் பெறப்படும் கன்றுகள் மற்றும் குட்டிகளை அரசு நிர்ணயிக்கும் விலையில் விவசாயிகளுக்கு வழங்கி, கால்நடைகளின் உற்பத்தியை உயர்த்த பணியாற்றி வருகின்றன.

அந்த வகையில், சின்ன சேலம் ஆட்டுப் பண்ணையில் தற்போது உயர் மரபணு திறன் கொண்ட அசல் இனப்பண்புகளுடன்கூடிய 679 மேச்சேரி இன செம்மறி ஆடுகளும், 208 சென்னை சிவப்பு இன செம்மறி ஆடுகளும், 261 தலச்சேரி இன வெள்ளாடுகளும், 225 சேலம் கருப்பு இன வெள்ளாடுகளும், ஆக மொத்தம் 887 செம்மறி ஆடுகளும், 486 வெள்ளாடுகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

விவசாயிகள் வளர்க்கும் ஆடுகளின் உற்பத்தியைப் பெருக்கும்விதமாக இவற்றிலிருந்து பெறப்படுகின்ற குட்டிகள், அரசு நிர்ணயித்த விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. சின்னசேலம் ஆட்டுப் பண்ணையில் 2 வெள்ளாட்டினங்களை தனித்தனியாகப் பராமரிக்கக்கூடிய அளவிற்கு இட வசதி இருப்பதாலும், அங்கு பராமரிப்பில் உள்ள தலச்சேரி மற்றும் சேலம் கருப்பு இனம் ஆகிய இரண்டு வெள்ளாட்டினங்களுமே இரட்டைகள் ஈனும் தன்மை கொண்டதாலும், ஆடு வளர்ப்போரிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதாலும் இவை பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மூன்றாவதாக, ஓர் ஆட்டினத்தைப் பராமரிக்கும்பட்சத்தில் இனக் கலப்பு ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு சின்னசேலம் ஆட்டுப் பண்ணையில் ஜமுனாபாரி ஆட்டினங்களைப் பராமரிக்க வாய்ப்பில்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாய்ப்பில்லை என்பதற்கு இவ்வளவு நீண்ட விளக்கமா?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு ஆட்டினங்களை, வெளிநாட்டு ஆட்டினங்களையெல்லாம் சொன்னார்கள். அவற்றை அவர், தனியாக எழுதித் தந்தால், இந்தத் துறைக்கு உதவிகரமாக இருக்கும் என்பதைச் சொல்லி, நன்றி கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

38—

கம்பிவட ஊர்தி

***67647—திரு. பொன். ஜெயசீலன்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கூடலூர் தொகுதி, ஊசிமலை முதல் தொரப்பள்ளி வரை கம்பிவட ஊர்தி வசதி செய்துதர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கூடலூர் தொகுதிக்குட்பட்ட ஊசிமலை பகுதியிலிருந்து தொரப்பள்ளி வரை கம்பிவட ஊர்தி அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள்.*

திரு. பொன். ஜெயசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எனது கூடலூர் சட்டமன்றத் தொகுதி, ஆண்டுதோறும் கேரளா மற்றும் கர்நாடகாவிலிருந்து உதகைக்குச் செல்லக்கூடிய 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்தக்கூடிய ஒரு வழித்தடமாக இருக்கின்றது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற சிறப்புத் திட்டத்தின்கீழ் நான் கொடுத்த 10 கோரிக்கைகளில் 8-வது கோரிக்கையாக, கூடலூர் ஊசிமலை பகுதியிலிருந்து தொரப்பள்ளி வரை கம்பிவட ஊர்தி, அதாவது* rope car *அமைத்துத் தரப்படுமா என்ற கேள்வியை நான் எழுப்பியிருந்தேன்.*

முற்பகல் 11-05

அதன் அடிப்படையில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்கீழ் செயல்பட்டு வரக்கூடிய National Highways Logistics Management Limited *என்ற நிறுவனத்தின் வாயிலாக*